புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# கலித்தொகையில் தொன்மங்கள்

மு.உமா
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை இசுலாமியக்கல்லூரி
(தன்னாட்சி நிறுவம்)
வாணியம்பாடி -2

முனைவர் மு.முஜிபுர் ரகுமான்
நெறியாளர்
இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை
இசுலாமியக்கல்லூரி (தன்னாட்சி நிறுவம்)
வாணியம்பாடி -2

ஆய்வுச்சுருக்கம்:

பன்நெடுங்காலமாக தொன்மங்கள் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் மரபுத் தொடர்களாக மக்களின் வாழ்க்கை முழுவதும் தொன்றுதொட்டு வழங்கிவந்துள்ளன. இத்தொன்மங்கள் உலக இலக்கியங்களிலும் மேலோங்கி காணப்படுகின்றன.

இலக்கியங்களில் உள்ள தொன்மக் கூறுகளே ஒரு மொழியின் தொன்மையையும் நாகரிகத்தையும் பண்பாட்டுக் கூறுகளையும் காட்டும் காலக் கண்ணாடியாகத் திகழ்கின்றன. ஒண்மை மொழியான தமிழ் மொழியில் தொன்மங்கள் சங்க இலக்கியங்கள் தொடங்கி இன்றைய நவீன இலக்கியங்கள் வரை காலந்தோறும் பரந்தும் விரிந்தும் வளர்ந்து வந்துள்ளன. இத்தொன்மக்கூறுகள் சங்க இலக்கியங்களில் வேரூன்றி காணப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் ஒன்றான கலித்தொகையில் தொன்மையான புராணக்கதைகள் பழங்கதைகள் கதைப் போக்கிற்கு ஏற்ப புனைந்துரைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான தொன்மக்கூறுகள் கலித்தொகையின் சமூகப் பண்பாட்டு பின்னணியில் எவ்வாறு காட்சிப்படுத்தப்படுகிறது என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

திறனறிச் சொற்கள்:

தொன்மம், புராணம், ஏறுதழுவுதல், கொல்லேறு, வஞ்சினம், திருமறு, நேமியான், ஆயம், கூற்றுவன், கணிச்சி, ஒருகுழையுடையான், பிறைசூடன், அவுணர், மாகொன்றான்.

## முன்னுரை:

தொன்மம் என்பது பழங்கதை, புராணம் என்ற பொருள் உடையது. காலங்காலமாக உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட கருத்து வடிவங்களும் தொன்மம் எனலாம். இவ்வாறான தொன்மக்கதைகள் சங்க இலக்கியத்தில் அகநூல்களில் ஒன்றான கலித்தொகையில் சூழலியலின் கருத்துக்களை விளங்குவதற்கு பெரும் பங்கு ஆற்றுகின்றன.

விளங்காத கருத்துக்களை எளிதில் விளங்க வைக்கவே இத்தொன்மங்கள் இலக்கியப் படைப்புகளில் புனைந்துரைக்கப்பட்டுள்ளன. தொன்மங்கள் மக்களின் மனங்களிலும் வாழ்க்கை முறைகளிலும் பிண்ணிப்பிணைந்துள்ளதை அறியலாம். இவ்வாறான தொன்மக்கதைகள் கலித்தொகையில் இடம் பெற்றுள்ளதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தொன்மம் - பொருள் :

தொன்மை வாய்ந்த பழங்கதைகளை விவரித்துக் கூறுவது தொன்மம். இதனைப் புராணம், மான்மியம் என்னும் சொற்களால் வழங்கிவந்தனர். டாக்டர் கா. மீனாட்சி சுந்தரனார் ஆலவா என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகத்தொன்மம் என்னும் சொல்லைக் குறிப்பிடுகிறார்1.

சில தொன்மங்கள்இ சமய நம்பி;க்கைகளையும் சடங்குகளையும் மையமாகக் கொண்டு விளங்குகின்றன. உவமைக் கதைகளாகவும் மெய்யியல் உருவகங்களாகவும் சமுதாயத்திற்கு

*வழிகாட்டியாகவும் இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தொன்மங்களை அறிவியல் முறையில் ஆய்வு செய்யவோ புரிந்து கொள்ளவோ முடியாது. அவை சமுதாயத்தின் ஆழ்மனத்திலிருந்து வெளிப்படுவனவாகவும் விளங்குகின்றன. என்று 'வெப்ஸ்டார்ஸ் தேர்டு நியு இன்டர்நேஷனல் அகராதி புலப்படுத்துகிறது2.*

*எது தொன்று தொட்டு இன்று வரையில் பரவி இருக்கின்றதோ அதுவே புராணம் என்று வாயுபுராணம் கூறுகின்றது. (வாழ்வியல் களஞ்சியம் தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகம்-3.*

*தமிழ் மொழியின் முதன்மை இலக்கண நூலான தொல்காப்பியம்இ தொன்மை குறித்து பதிவு செய்துள்ளது.*

*தொன்மை தானே சொல்லுங்காலை*
*உரையொடு புணர்ந்த பழமை மேற்றே - (செய்யு – 229 )4*

*தொன்மை என்பது பழமை என்று இலக்கணம் கூறியுள்ளது. இந்நூற்பாவிற்கு உரைகண்ட இளம்புரணர் "நிறுத்த முறையானே தொன்மைச் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று என்று கூறித் தொன்மையாவது உரையொடு பொருத்திப் போந்த பழைமைத்தாகிய பொருள் மேல் வருவது" என்று உரை கூறுகிறார்;. (5) பேராசிரியரும் "தொன்மை என்பது உரைவிராய்ப் பழைமையனவாகிய கதை பொருளாகச் செய்யப்படுவது அவை, பெருந்தேவனார் பாரதம்இ தகடூர் யாத்திரை போல்வன என்று தொன்மத்திற்கு இவ்விலக்கியங்களை உதாரணப்படுத்துகிறார். இவ்வாறாக தொன்மத்திற்கு பொருள் கூறப்பட்டுள்ளன.*

*நலம் சார்ந்த தொன்மம்:*

*சங்க கால மக்கள் நிலம் சார்ந்தும்இ மண் சார்ந்தும் அவர்களின் பண்பாடு மற்றும் வாழ்க்கை முறை சார்ந்தும் சமய வழிபாட்டு முறை அமையப்பெற்றுள்ளது நிலம் சார்ந்த சங்க சமூகம் பஞ்சபூதங்களை வணங்கியும் வந்தனர். பின்நாளில் தெய்வங்களுக்கு உருவம் தந்ததன் தொடர்ச்சியே வழிபடு தெய்வங்களாக மாறியுள்ளன. அவையே ஐவகை நிலங்களுக்கான தெய்வங்களாக முருகன் திருமால் இந்திரன் வருணன் என்று தொல்காப்பியம் பதிவு செய்துள்ளது. அவை*

*"மாயோன் மேய காடுறை உலகமும்*
*சேயோன் மேய மைவரை உலகமும்*
*வேந்தன் மேய தீம்புனல் உலகமும்"*

*(தொல்.அகம்- (7)*

*பழங்காலந்தொட்டே மனிதன் இயற்கையை வணங்கி பின்பு நாகரிக மாற்றத்திற்கேற்ப மண் சார்ந்த கடவுள்களாக பகுத்து வாழ்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பன்நெடுங்காலமாக மக்களின் வாழ்வில்இ வழிநெடுகிலும் தெய்வம் சார்ந்த மரபுகளும் நம்பிக்கைகளும் புரையோடிக்கிடக்கின்றன. இவற்றின் நீட்சியாகவே சங்க இலக்கியங்களில் நிலம் சார்ந்த தெய்வங்களின் வழிபாட்டு முறைகளும் மரபுகளும் கட்டமைக்கப்பட்டுள்ளன.*

*கலித்தொகையில் தொன்மம்:*

*சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான கலித்தொகை அகப்பொருள் சார்ந்து பாடப்பட்ட நூல் ஆகும். இந்நூலை குறிஞ்சிக்கலி – கபிலர் முல்லைகலி – சோழன் நல்லுருதிரன் மருதக்கலி – மருதன்இளநாகன்; பாலைக்கலி –பெருங்கடுங்கோ நெய்;தற்கலி- லவாழ்த்து பாடியவர் நெய்தற்கலியைப்பாடிய நல்லந்துவனாரே ஆவார். இந்நூல் முழுமையையும் தொகுத்து அளித்தவரும் இவரே ஆவார்.*

*இந்நூலைப்பாடிய ஐந்து புலவர்களும் தங்கள் பாடல்களில் தொன்மக்கூறுகளைக் கொண்டு கதைப் போக்கிற்கு ஏற்ப புனைந்துரைத்துள்ளனர். நூலின் தொடக்கமாக நல்லந்துவனார் கடவுள் வாழ்த்துப்பாடலில் சிவபெருமானுக்குரிய குணங்கள் செயல்கள் சார்ந்த புராணக்கதையைக் கூறியுள்ளார்.*

*'ஆறு அறி அந்தணர்க்கு அருமறை பல பகர்ந்து'*
*'மண்டு அமர் பலகடந்து மதுகையால் நீறு அணிந்து'*
*'பாண்டரங்கம் ஆடுங்கால் பணை அணிந்து எழில் அணை மென்தோள்' (கலி.கடவுள் வாழ்த்து - 1)5*

இறைவனின் செயல்களாக அந்தணர் என்னும் சான்றோர்க்கு அரிய நுட்பங்களை தெளிவித்தல்இ திரிபுரம் எரித்தல்இ மணிமிடறுஇ கரத்தில் துடிகொண்டு ஒலிக்கச் செய்தல் இறந்தாரது நீற்றினை அணிதல் பல்வகை ஆடல் புரிதல் முதலான தொன்மக்கூறுகள் கடவுள் வாழ்த்துப்பாடலில் இடம்பெற்றுள்ளன. முழுமுதற் கடவுளான சிவனைக் கடவுள்வாழ்த்துப் பாடலில் முதன்மைப்படுத்திப் பாடப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாகவே மக்களிடத்தில் இன்றும் இறுதிச் சடங்குளில் நீற்றினை அணிதல் என்ற வழக்கம் நடைமுறையில் இருந்து வருகின்றன. இவ்வாறாக கலித்தொகையில் இடம்பெறும் புராணக்கதைகளின் முக்கிய கதாப்பாத்திரங்களான சிவன் முருகன் திருமால் இந்திரன் பலராமன் மன்மதன் முதலான தெய்வங்களின் பழங்கதைகள் இந்நூலின் பனுவல்களில் இழையோடிக்கிடக்கின்றன.

*பாலைக்கலியில் தொன்மக்கூறுகள்:*

அகநூல்களில் ஒன்றான கலித்தொகையில் ,முதலாவதாக இடம் பெற்ற பாலைக்கலியில் 7 பாடல்களில் தொன்மக்கூறுகள் இடம்பெற்றுள்ளன .

தலைவன் பொருள்வயின் பிரிவை தலைவி ஆற்றாதவளாய் உள்ளாள் என்றும் செல்கின்ற வழியோ வெம்மையுடையது என்றும் தோழி கூறும் கூற்றுக்கு சிவபெருமான் அவுணர்களையும் அவர்கள் மூன்று கோட்டைகளையும் (திரிபுரம்) முக்கண்ணால் அழித்த போது மலைகள் எல்லாம் வெடித்து சிதறி கிடக்க அவ்வழியாகப் போவோர்க்கு வழியில்லாமல் வீழ்ந்து குறுக்கிட்டு கிடப்பதுபோல் நீ செல்லும் வழி உள்ளது என்று கூறுகிறாள் இதில் சிவபெருமான் அவுணர்களை அழித்த கதை புனையப்பட்டுள்ளது.

“தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய அமரர் வந்து இரத்தலின் “
மடங்கல்போல் சினைஇ மாயம்செய் அவுணரைக்
கடந்து ஆடுமன்பொடு முக்கண்ணான் மூஎயினும்.
சீறு ஆரங் கணிச்சியோன் சினவலின் அவ்எயில்
ஏறு பெற்று உதிர்வன போல் வரை பிளந்து இயங்குநர்
ஆறு கெட ……………………………… (பாலை - 2)6

இங்கு பாலையின் வெம்மையையும் தலைவன் பொருள்வயிற் பிரியும் செய்யசுரத்தையும் மகாபாரத நிகழ்வுமூலம் உவமிக்கப்பட்டுள்ளது.

“ஐவர் என்று உலகு ஏத்தும் அரசர்கள் அகத்தரா
கைபுனை அரக்கு இல்லைக் கழர் எரி சூழ்ந்தாங்கு” (பாலை – 2)7

இதில் பாண்டவர்களை அழிப்பதற்காக துரியோதனன் அமைத்த அரக்கு மாளிகை நிகழ்வு உவமையாக்கப்பட்டுள்ளது. இராவணன் பற்றிய செய்தியும் இடம்பெற்றுள்ளது.

*குறிஞ்சிக்கலி*

குறிஞ்சிக்கலியில் முருகனை ஏத்துதல் மகளிர் தை நீராடல்இ திருமணமுறைஇ தம்பலம் செய்தல் சிவனின் மகன் முருகன் வழிபாடுஇ முருகன் சூரனை வதம் செய்தல் முதலான தொன்மக்கூறுகள் பல பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

“மறம்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்
குறங்கு அறித்திடுவான் போல் (குறிஞ் – 52)8

யானையானது தனக்கு துன்பம் தந்த புலியினைத் தனது கோட்டால் குத்தி கொல்வது போன்று வீமன் துரியோதனனைத் தொடையில் அடித்து கொல்லுகின்ற செயல்; உவமிக்கப்பட்டுள்ளது.

“சூர் கொன்ற செவ்வேள் பாடி “ (குறிஞ் – 93)9

*முல்லைக்கலி*

துமிழர்களிடத்தில் ஏறுதழுவுதல் என்ற மரபு தொன்றுதொட்டு இருந்து வருகின்றது. ஏறுதழுவுதல் முல்லை நிலத்திற்கு உரிய பண்பாடாகும். அவ்வாறு தழுவப்படுகின்ற காளைகளின்; தன்மை முக்கண்ணன், முருகன், பலராமன், திருமால் போன்ற தெய்வங்களின் செயல்கள் குணங்கள் அக்காளைகளின் நிறத்திற்கு உவமையாகச் சொல்லப்பட்டுள்ளன.

*"அம்சீர் அசைஇயல் கூந்தற் கை நீட்டியான்*
*நெஞ்சம் பிளந்து இட்டு நேரார் நடுவண்இ தன்*
*வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்" (முல்-101)10*

*இங்கு தொழுவத்தில் உள்ள காளைகளை அடக்க முற்பட்ட வீரர்கள் குத்தி குடற்சரியச் செய்ததை, வீமன் திரௌபதியின் கூந்தலிலே கை நீட்டிய துர்ச்சாதனின் நெஞ்சைப் பிளந்து வஞ்சினத்தை நிறைவேற்றியதற்கு உவமிக்கப்பட்டுள்ளது.*

*"பால்நிற வண்ணன் போல்பழி தீர்த்த வெள்ளை*
*திருமறு மார்பன் போல் திறன் சான்ற காரியும்*
*மிக்கு ஒளிர் தாழ்சடை மேவரும் பிறைநுதல்"*
*முக்கணான் உருவே போல முரண் மிகு குராலும்*
*வேல்வலான் நிறனே போல வெருவந்த சேயும் ஆங்கு அப்*
*பொருவரு பண்பின் அவ்வையும்" (முல் - 104)11*

*இங்கே பனைக் கொடியையுடைய பலராமன் போல் வெள்ளைஎருதுஇ திருமகளை மறுவாக கொண்டவனும் மாயோனுமாகிய திருமாலின் நிறமுடைய கரிய எருதுஇ சிவனின் உருவினை ஒத்த வலிமையுடைய கபிலைநிற எருதுஇ மாமரத்தின் வடிவில் இருந்த சூரபத்மனை கொன்ற வல்லவனான முருகனின் நிறத்தில சிவந்த எருது என ஏறுகளின் பண்புக்கும் வலிமைக்கும் இத்தெய்வங்களை ஒப்பிட்டு கூறப்பட்டுள்ளது. மேலும் ஆலமரமும்இ கடப்பமரமும் தெய்வங்கள் உரையும் இடங்களாக நல்லந்துவனார் தம் பாடலில் பதிவு செய்துள்ளார்.*

*'ஆலும் கடம்பும் அணிமார் விலங்கிட்ட*
*மாலைபோல் தூங்கும் சினை (முல் - 106)12*
*'மலையொடு மார்புஅமமந்த செல்வன் அடியைத்*
*தலையினால் தொட்டு உற்றேன்இ சூள் ' (முல் - 108)13*

*இப்பாடலில் தலைவன் தலைவி மீது உள்ள அன்பை மெய்ப்பிக்க திருமாலின் திருவடிகளைத் தலையால் வணங்கிக் கையினால்; தொட்டுச் சூளுரைத்தான். இங்கு சூளுரைத்தல் என்ற செயல் இன்றும் மக்களிடத்தில் வழக்கத்தில் உள்ளது குறிப்பிடதக்கது.*

*ஏறுதழுவுதல் என்பது வீரர்களின் வலிமைக்கு சான்றாக சங்ககாலம் தொட்டு இன்றுவரை இந்நிகழ்வானது நம் பண்பாட்டின் நீட்சியாக நடைமுறையில் இருந்து வருகின்றது.*

*"கொல்லேற்று கோடு அஞ்சுவானை*
*மறுமையிலும் புல்லாலே ஆயர் மகள் தோள்" (முல் -103 )14*

*தலைவியின் அழகுக்கு ஊர்வசி திலோத்தமை போன்ற புராணகாலப்பெண்களின் அழகு ஒப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறாக பாடல்களில் தொன்மக்கூறுகள் விரவி காணப்படுகின்றன.*

*நெய்தற்கலி :*

*நெய்தற்கலியில் தலைவன் தலைவியை மணந்து கொள்வேன் என்று சூளுரைத்தல்இ சிவபொருமான் தட்சணமூர்த்தியாக அறம் உரைத்தல், சூதில் பொருட்களையெல்லாம் இழந்து நிற்பது போல் தலைவியை இழந்து விடுவாய் என தலைவனுக்கு அறிவுறத்தல் முதலான புராணம் சார்ந்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.*

*"அயம் திகழ் நறுங் கொன்றை அலங்கல்அம் தெரியலான்*
*இயங்கு எயில் எயப் பிறந்த எரிபோலஇ எவ்வாயும்*
*கனைகதிர் தெறுதலின் கருத்து எழுந்த காம்புத்தீ" " (நெய் - 150)15*

*இவ்வாறாக நல்லந்துவனார் புராணம் சார்ந்த கூற்றுக்களைத் தொடக்கம் முதல் இறுதிவரை தம் பாடல்களில் கதைப்போக்கிற்கு ஏற்ப புனைந்து கூறியுள்ளார்.*

*தொகுப்புரை:*

- *தொன்மை என்பது புராணம் பழங்கதைகள் என்ற பொருண்மையில் கலித்தொகயில் பதிவு செய்யப்பட்டுள்ளன.*
- *மனித மனங்களுக்கு புலப்படாத விளங்காத ஒன்றை விளங்க வைக்கவே தெய்வம் சார்ந்து கதைகள்இ புராணங்கள் கலித்தொகையில் பாக்களின் கதைப் போக்கிற்கு ஏற்ப புனையப்பட்டள்ளன.*

- *சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து பிற்கால நவீன இலக்கியங்கள் வரை இதன் தடங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.*
- *இதன் தொடர்ச்சியாகவே புதுமைப்பித்தனின் அகலிகை சாபவிமோசனம் முதலான கதைகளிலும் கவிஞர் கண்ணதாசன் கவிக்கோ அப்துல் ரகுமான் முதலானோர் கவிதைகளிலும் தொன்மக் கூறுகள் காணப்படுகின்றன. இலக்கியங்களில் காணப்படும் தொன்மக் கூறுகள் புராணம் சார்ந்த கதைகள் மனித வாழ்வில் பிரிக்கமுடியாத ஒன்றாக இறுகி படிந்துகிடப்பதை நம்மால் அறிய முடிகிறது.*
- *சங்க இலக்கியங்கள் அக்கால மக்களின் பண்பாடும் வாழ்வியல் நெறிகளும் இலக்கிய நயத்தோடு தொன்மக்கூறுகளைப் பின்புலமாகக் கொண்டு கதை ஓட்டத்;திற்கு ஏற்ப கவித்துவமாக கட்டமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.*

*முடிவுரை*

*இலக்கியங்களில் அன்று முதல் இன்று வரை தொன்மங்கள் சூழலியலின் கருத்தைப் புலப்படுத்;தும் ஒரு உத்தியாகக் கையாளப்பட்டு வருகின்றன. கலித்தொகையில் உவமை உருவகம் உள்ளுறை இறைச்சி என பல்வேறு இலக்கிய உத்திகளில் பனுவல்களும் அவற்றின் ஊடாக தொன்மக்கூறுகளும் புனைந்துரைக்கப்பட்டுள்ளன என்பதை அறியமுடிகிறது.மேலும் தொன்மம் சார்ந்த கதைகள் புராணங்கள் காலந்தோறும் மக்கள் வாழ்வில் ஒரு அங்கமாக இருந்துள்ளதை நம்மால் அறியமுடிகின்றது. இவ்வாறாக கலித்தொகையில் பனுவல்களின் கவித்திறத்திற்கும் கற்பனை நயத்திற்கும் கதை ஓட்டத்திற்கும் ஏற்ப தொன்மங்கள் புராணக்கதைகள் ஒப்புமைப்படுத்திப் படைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்;ளதை இவ்வாய்வுக்கட்டுரையின் மூலம் அறியப்படுகின்றது.*

*சான்றெண் விளக்கம்;*

1. வகைமை நோக்கில் தமிழிலக்கிய வரலாறு – பேரா முனைவர் பாக்கியமேரி
2. வெப்ஸ்டார்ஸ் தேர்டு நியூ இன்டர் நேஷனல் அகராதி
3. வாழ்வியல் களஞ்சியம் - தமிழ்ப்பல்கலைக் கழகம்
4. தொல்காப்பியம் மூலமும் உரையும் - பேரா முனைவர் ச.வே.சுப்பிரமணியம்
5. கலித்தொகை – கடவுள் வாழ்த்துப்பாடல்
6. கலித்தொகை – பா-1.2
7. மேலது – பா – 25
8. .மேலது – பா -52
9. .மேலது – பா- 93
10. .மேலது – பா - 101
11. .மேலது – பா- 104
12. .மேலது – பா -106
13. .மேலது – பா- 108
14. .மேலது – பா -150

*முனைவர் அ. விசுவநாதன்*
*சங்க இலக்கியம்( தொ.ஆ)*
*ஊடீர்அம்பத்தூர் சென்னை – 98*
*(முதற்பதிப்பு – 2004) ss*

********* ********* ********** ********* ********* ********** ********** **********